ராஜா வேத பாடசாலை ஸ்தாபகர்

# மஹான் கோவிந்த தீக்ஷிதர் அவர்கள் சரித்திரச் சுருக்கம்

T-UN-489



ராஜா வேத பாடசாலை,

(ஸ்தாபிதம் : 1542)

யாகசாலைத்தெரு, கும்பகோணம்.

## ஆசிரியர் குழு.

### தலைமை உபாத்தியாயர் : ஸாமவேத அத்யாபகர்

பிர்மஸ்ரீ வெங்கட்டராம ச்ரௌதிகள் (alias) தர்மராஜ ச்ரௌதிகள்

இந்த பரம்பரையினர் தஞ்சை மஹாராஜாக்களால், பல்லக்கு முதலிய பிருதுகள் கொடுத்து ஸன்மானிக்கப் பட்டவர்கள். தர்ம ப்ரபு சென்னை ஸ்ரீ பச்சயப்ப முதலியார் அவர்களால் வீடும், பூமியும் தந்து கௌரவிக்கப்பட்ட வர்கள். இன்றும் இவர்கள் இந்த ஸொத்தை அனுபவித்து வருகின்றனர். இந்த பரம்பரையினர் வாழையடிவாழையாய் இந்த பாடசாலை ஆரம்பமுதல் ஸாமவேத அத்யாபகரா யுள்ளனர். இவர் இந்தமுறையில் 7-வது தலைமுறையின ராவர். இந்த பரம்பரையினர் தனது தந்தையினிடமே அத்ய யனம் செய்தவர்கள். இவர் ஸாமவேதத்தில் ப்ரமாண புருஷராவரர்.

### ரிக்வேத அத்யாபகர்

பிர்மஸ்ரீ ராமச்சந்திராசார், ரிக்வேதத்தை பூர்ணமாய் அத்யயனம் செய்தவர். வேதம் வ்யாகரணம், வேதாந்தம் இவைகளில் மஹா பண்டிதராயிருந்த ஸ்ரீ ப்ரயாகாசாரி யாரின் பேரனுமாவர். ஸ்ரீ ப்ரயாகாசாரியாரும் இந்த பாட சாலையில் ரிக்வேத அத்யாபகராக இருந்தவரே. இந்த பரம் பரையினர் ரிக்வேதத்தில் பாரங்கதர்கள். இவர்களின் பாண்டித்யத்தை கௌரவித்து கோவிலடி ஸ்ரீவெங்கடராயர் தர்ம எஸ்டேட்டால் வீடும், பூமியும் கொடுத்து ஸன்மானிக் கப்பட்டவர்கள். இவர் இன்றும் இந்த ஸொத்தை அனுப வித்து வருகிறார்,

### யஜுர்வேத அத்யாபகர்

பிர்மஸ்ரீ வெங்கட்டராம கனபாடிகள். இவர் கனாந்தம் அத்யயனம் செய்தவர். இவர்கள் பரம்பரையாக ஸலக்ஷண வித்வான்கள். திருவையாறு வேதமூர்த்தி ஸ்ரீ முத்து கன பாடிகளிடம் வேதம் பயின்றவர்கள். மைசூர் புதுக் கோட்டை போன்ற பல ஸமஸ்தானங்களால் கௌரவிக்கப் பட்டவர்கள். இந்த பரம்பரையினரில் பலரும் இந்த பாட சாலையில் யஜுர்வேத அத்யாபகராக இருந்துள்ளனர்.

### காவ்ய உபாத்யாயர்

பிர்மஸ்ரீ பட்டாபிராம சர்மா, இவரின் பரம்பரை பல சாஸ்திரங்களிலும் பிரஸித்தமானவர்கள். இவர் மீமாம்ஸா சிரோமணியாவார். ''பாட்ட ரஹஸ்யம்'' என்ற மீமாம்ஸா உயர் நூலில் பரீக்ஷை கொடுத்து ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ ஆசார்யாள் அவர்களால் சால்வையும் பெரும் துகையும் ஸன்மானித்து அனுக்ரஹிக்கப்பெற்றவர்.

श्रीः

T-UN-489



मुद्रा

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य
श्रीमच्छंकरभगवत्पादप्रतिष्ठित
श्रीकाञ्चीकामकोटिपीठाधिपजगद्गुरु
श्रीमत्चन्द्रशेखरेन्द्रसरस्वतीश्रीपादादेशानुसारेण
श्रीमत्जयेन्द्रसरस्वतीश्रीपादैः क्रियतेनारायणस्मृतिः ॥

உலகம் நன்கு வாழ்வதற்கு அடிப்படையானது தர்மம் **धर्मो विश्वस्य जगतः प्रतिष्ठा** என்று வேதம் கூறுகிறது. இந்த தர்மத்துக்கு ஆணி வேர் வேதமாகும். **वेदोऽखिलो धर्ममूलम्'** என்பது மனுஸ்ம்ருதி வாக்கியம். ஆகவே உலகம் ஸுபிக்ஷமாக வாழ வேண்டுமானால் வேதத்தை அபிவிருந்தி செய்து காப்பாற்ற வேண்டியது இன்றியமையாததாகும்.


இந்த உண்மையை அறிந்து சுமார் நானூறு வருஷங்களுக்குமுன் தஞ்சாவூர் நாயக்கர் ராஜ்யத்தில் முக்ய மந்திரியாக விளங்கி கணக்கற்ற தர்மங்களை செய்து புகழ்பெற்றுள்ள மஹான் **கோவிந்த தீக்ஷிதர்**. கும்பகோணத்தில் காவேரி புண்ய நதிக்கரையில் தான் யக்ஞானுஷ்டானம் செய்த புண்ய பூமியில் உலகத்தை உய்விக்க ருக், யஜுஸ், ஸாம வேதங்களை அத்யயனம் செய்ய ஓர் வேதபாடசாலையை நிறுவினர். இன்றுவரையில் இந்த பாடசாலை அவிச்சின்னமாய் நடந்து வருகிறது. இப்போது இந்த பாடசாலையில் முப்பத்தாறு வித்யார்த்திகள் வேதாத்யயனம் செய்து வருவதை அறிந்து மிகவும் சந்தோஷமடைகிறோம்.

இப்போதுள்ள கால நிலையில் இப்பாடசாலையின் வருவாய் குறைந்து பாடசாலையை நடத்துவதே மிகவும் சிரமகரமான ஓர் நிலை ஏற்பட்டுள்ளதை அறிகிறோம்.


**ஆஸ்திகர்கள் மிகவும் புராதனமான இந்த பாடசாலை நன்கு நடப்பதற்கு பூர்ணமாய் உதவி செய்து இந்த வேத தர்மத்தைக் காப்பாற்றுவதின் மூலம் எல்லா மங்களங்களையும் அடைவார்களாக.**

ஸ்ரீ காஞ்சி க்ஷேத்ரம்
ஸாதாரண ச்ராவண சுத்த
சதுர்தசீ

**நாராயண ஸ்ம்ருதி:**



ஸ்ரீ தீக்ஷிதரவர்களால் ப்ரதிஷ்டை
செய்யப்பட்டு பூஜித்துவந்த
ஸ்ரீ வீராஞ்ஜநேயர்



ஸ்ரீ தீக்ஷிதரவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட

அச்வத்த விருக்ஷம்

|| वेदो नित्यमधीयताम् ||

|| वेदोऽखिलो धर्ममूलम् ||

|| वेदाः वयं वः शरणं प्रपन्नाः ||

अद्वैतविद्याविभवावलम्बान्
गोविन्दयज्वेन्द्रगुरूनुपासे ।
निमथ्य षड्दर्शननीरधीन् ये
धियैव मार्गान् ददते बुधेभ्यः ॥

# மஹான்
# ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்கள்
## கும்பகோணம் ராஜா வேத பாடசாலை ஸ்தாபகர்
(ஸ்தாபிதம்: 1542)

15ம் நூற்றாண்டில் விஜயநகர சாம்ராஜ்யம் தெற்கே சோழமண்டலம் பூராவும் விரிந்து பரவி அரசாட்சி செலுத்திய காலத்தில் தஞ்சையை ஆண்ட நாயக்கர் மன்னர்களில் செவ்வப்ப நாயக்கர், அச்சுத நாயக்கர், ரெகுநாத நாயக்கர் என்ற மூன்று அரசர்கள் முறையே அற நெறி தவறாமல் சோழ நாட்டில் ஆட்சி புரிந்து வந்தனர்.

அவர்களின் நீதிவழுவாத அரசாட்சிக்கு உறுதுணையாயிருந்து வழிகாட்டி பல அறிய தர்மங்களை ஸ்தாபித்து அழியாப் புகழுடன் விளங்கிய மாமந்திரியே “மஹான் கோவிந்த தீக்ஷிதர்” ஆவார்.

இவர் சிறந்த அரசாங்க நிர்வாகியாக இருந்த துடன் வேதமுறையைத் தழுவி அக்னிஹோத்ரம் முதலிய நித்ய கர்மாக்களை முறைப்படி நடத்தியும், வேதத்தில் கூறப்பட்ட எல்லாவித யாகங்களையும் தானே அனுஷ்டித்தும், நிகரற்ற தவச்சீலராயும் இருந்துவந்தார். இவர் "ஸர்வதோமுகம்" என்ற யாகத்தை அனுஷ்டித்ததுபற்றி கீழ்க்கண்ட ஸ்லோகம் கூறுகிறது:

चत्वारः कृतसर्वतोमुखमहामत्रेण गढं शिला-
यूपा येन निखानिताः प्रतिदिशं युक्तं चिरावस्थितैः ॥

மந்திரி திலகமான இம் மஹானும் அரசனும் ஒரே சிம்மாஸனத்தில் வீற்றிருந்து செங்கோல் செலுத்தியதாயும் காண்கிறோம்.

अस्य श्रीरघुनाथ भूवलरिपोरध्यासितासनो
गोप्ता नित्यगवीरसौ विजयते गोविन्दयज्वाग्रणीः ॥

அரசனையும், மந்திரியையும் ஒரே ஆஸனத்தில் வீற்றிருந்ததைக் கண்ட ஓர் கவி சிலேடையாக வர்ணிக்கிறார்

त्रिनामाद्यन्तनामानौ महीक्षिद्दीक्षितावुभौ ।
शस्त्रे शास्त्रे च कुशलौ आहवेषु हवेषु च ॥

அச்சுதா, அனந்தா, கோவிந்தா என்ற மூன்று நாமங்களில் (பெயர்) முதல்வன் முதல் நாமமான அச்சுதன் என்ற அரசன், வில்வித்தை யிலும், போர் முறையிலும் சிறந்தவனாகவும்

மற்றவன் மூன்ருவது நாமமான கோவிந்தா என்ற பெயருடைய தீக்ஷதன் கல்வி, கேள்விகளிலும் வேள்விகளை செயவதிலும் சிறந்தவன் என்றும் குறிப்பிடுகிருர்.

இந்த புண்ணிய புருஷன் ஸகல சாஸ்திரங்களிலும், உயர் நூல்களை அருளியுள்ளார். ஸ்ரீ பகவத்பாதர்களை "அத்வைத வித்யா ப்ரதிஷ்டாபனச்சார்யாள்" என்று கூறுவதுபோல இம்மஹானை" அத்வைத வித்யாசார்யாள்" என்று முன்னேர் குறிப்பிடுவர். இவர் வேத சாஸ்திரங்களில் மாத்திரம் அல்லாமல் ஸங்கீத சாஸ்திரத்திலும், "ஸங்கீத சுதா நிதி" என்ற உயர் நூலையும் இயற்றியுள்ளார்.

இவருடைய தூண்டுதலால்தான் "ஸ்ரீ அப்பைய தீக்ஷிதர்" அவர்கள் "கல்பதரு" என்ற வேதாந்த நூலுக்கு "பரிமளம்" என்ற சிறந்த உரையை எழுதியுள்ளார். அதேபோல வடமொழியில் உள்ள திருவையாறு புராணத்தைத் தமிழில் மொழிபெயர்த்து உள்ளதாகவும் ஒருவர் குறிப்பிடுகிருர்.

மலிபுனல் சோழனுடு தஞ்சையிற் காத்திடுமரசர்
மதியமைச்சனெலி மறைதேர் கோவிந்த தீக்ஷதராயன்
திருவாக்குடமையாலே கலியுகத்து சகமாண்டு
மூவைந்து நூற்றியிருபதின் மேல்கானும் மேழாய்ப்
புலிவருடத்தை பேரற்று புராண வடமொழி தமிழார்ப்
புகலுற்றேன்

## அன்னாரின் குடும்பம்


ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் உபமன்யு வஸிஷ்ட கோத்ரத்தைச் சேர்ந்தவராவார்கள். ரிக்வேதம் ஆச்வலாயன ஸூத்ரம். இவருடைய தர்ம பத்தினியின் பெயர் நாகமாம்பாள். இவர்களுக்கு ஏழு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் இருந்ததாகத் தெரிகிறது. பிள்ளைகளில் மூத்தவரான ஸ்ரீ யக்ய நாராயணதீக்ஷிதரும், இளையவரான வேங்கடமகீ என்பவரும் தனது தந்தைக்கு நிகரான மஹா பண்டிதர்களாவர். ஸ்ரீ யஞ்ய நாராயண தீக்ஷிதர் பல சாஸ்திரீய க்ரந்தங்களை உருவாக்கியதுடன் ரெகுநாத பூப விஜயம், ரெகுநாத விலாஸ நாடகம் சாகித்ய ரத்னகரம் முதலிய காவ்ய க்ரந்தங்களையும் செய்துள்ளார். மேலும் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர்' களால் அனுஷ்டிக்கப்பட்ட ''ஆப்த வாஜபேயம்'' என்ற யாகத்தில் ஆத்வரம் செய்ததாகத்தெரிகிறது

வேங்கடமகீ என்பவர் மீமாம்ஸா சாஸ்திரத்தில் வார்த்திகா பரணம் என்ற நூலையும், ஸங்கீத சாஸ்திரத்தில் சதுர் தண்டிப்ராகாசிகா என்ற நூலையும், இதுபோல பல சாஸ்திரங்களிலும், பல நூல்களை இயற்றியுள்ளார்கள். மஹான் நீலகண்ட தீக்ஷிதர் அவர்கள் தன்னை இந்த வேங்கடமகியின் சிஷ்யர் என கீழ்க்கண்ட ஸ்லோகத்தால் குறிப்பிடுகிறார்:

वार्तिकाभरणग्रन्थनिर्माणव्यक्तकौशलः ।
श्रीवेङ्कटेश्वरमखी शिष्ये मय्यनुकम्पते ॥



வேதம் பயிலுமிடம்



ஸ்ரீ தீக்ஷிதரவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட
வன்னி விருக்ஷம்

பாட்ட சிந்தாமணி என்ற கிரந்தத்தை எழுதிய திருவிசநல்லூர் ஸ்ரீவாஞ்சேச தீக்ஷிதரும், ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர்களின் பெண் வம்சத்தைச் சாா்ந்தவரே.

1814லிருந்து 1857வரை ஸ்ரீ காஞ்சி காம கோடி பீடத்தை அலங்கரித்த ஸ்ரீசந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரின் வம்சத்தை சார்ந்தவர்களே, இவர்கள் மந்திர சாஸ்திரத்தில் வல்லவர்கள். இவர்கள் காஞ்சியிலும், ஜம்புகேஸ்வரத்திலும் உள்ள யந்திரங்களை புதுப்பித்தார்கள். இவர்கள் சாதாரண ஆண்டு கிருஷ்ண துவிதியை கார்த்திகை நட்சத்திரங் கூடிய தினத்தில் முக்தி அடைந்தார்கள். இவர்களுடைய அதிஷ்டானம் கும்பகோணம் ஸ்ரீ மடத்தின் பின்புறம் உள்ள மூன்று அதிஷ்டானங்களில் தெற்கிலிருந்து மூன்றுவது அதிஷ்டானமாகும். இவர்களுடைய பூர்வாசிரமப் பெயர் வேங்கடசுப்ரமணிய தீக்ஷிதராகும். இவர் கோவிந்த தீக்ஷிதரின் குமாரரான வேங்கட மகியினுடைய பேரனுடைய பேரன் எனத் தெரிகிறது.

நடமாடும் தெய்வமாய் இன்று நமக்கெல்லாம் கலங்கரை விளக்காய் இருந்து தர்ம வழியை காண்பித்து வரும் நமது ஸ்ரீ காஞ்சி பெரியவாள் அவர்களும் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களின் பெண் வம்சத்தை சார்ந்தவர்களே. இந்த வம்சத்திலிருந்து எவ்வளவு மஹான்கள், எவ்வளவு தபஸ்விகள், எவ்வளவு பண்டிதர்கள், எவ்வளவு அனுஷ்டான சீடர்கள், எவ்வளவு ராஜ நீதி நிபுணர்கள், உதித்து, உதித்து உலகை உய்வித்துள்ளார்கள்!!!

# அன்னார் செய்துள்ள தர்மங்கள்

தஞ்சையில் ஐயன்குளம், ஐயன்கடைத்தெரு, தஞ்சை, கும்பகோணம் மார்க்கத்திலுள்ள ஐயன் பேட்டை, கும்பகோணத்திலுள்ள ஐயன்தெரு, திருவண்ணாமலையில் உள்ள ஐயன்குளம் இவைகள் இவர்களால் நிர்மாணிக்கப்பட்டவைகள். ஐயன் என்ற சொல் சோழநாட்டில் ஸ்ரீ தீக்ஷிதர் அவர் களையே குறிப்பதாகும். மேலும் கும்பகோணம் ஸ்ரீ ராமஸ்வாமி கோவிலை நிர்மாணம் செய்து மேற்படி கோவில் உள் ப்ரகாரத்தில் ஸ்ரீ ராம காதை பூராவையும், சித்ரரூபமாய் வடித்து தந் துள்ளார். கும்பகோணம் ஸ்ரீ மங்களாம்பிகை சன்னதி, பட்டீஸ்வரம், திருப்பாலத்துறை, ஆலய நிர்மாணமும, இவர்களால் செய்யப்பட்டதே. அதே போல, விருத்தாசலம், திருவண்ணாமலை, சிதம பரம், ராமேஸ்வரம் கோவில்களையும் புதுப்பித்துள் ளார். குமபகோணம மஹாமக குளமும், அதைச் சுற்றியுள்ள மண்டபங்களும், 16 சிவலிங்க ப்ர திஷ்டையும், இவருடைய திருப்பணிகளே. இதற் கான சான்றுகளை இன்றும் காணலாம். பட்டீஸ் வரம் சிவாலயத்தில் ஸ்ரீ தீக்ஷிதரின் தம்பதிகள் சிலை ரூபத்தில் இருப்பதை இன்றும் காணலாம். அதனுடைய போட்டோ பிரதிதான் இதில் பதிப் பிக்கப்பட்டுள்ளது.

மஹாமககுளம் வடகரையிலுள்ள மண்டபத் தில் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களை ஓர் தராசில் வைத்து அவருடைய எடைக்கு ஈடாக 'தங்கதுலாபாரம்' அரசன் அளித்ததை கல் சித்திரத்தின் மூலம்

இன்றும் காணலாம். மேலும் திருவையாறு முதல் மாயூரம் வரையில் உள்ள காவேரி கரையில் ஆங்காங்கு புஷ்ய மண்டபங்களும் நிறுவியுள்ளார். திருவிடைமருதூர், மாயூரம், மஹாதானத்தெருக்களும் இவர்களால் நிர்மாணிக்கப்பட்டதே. திருவையாறு கும்பகோணம் மார்க்கத்திலுள்ள ஈச்சங்குடி, திருக்காட்டுப்பள்ளிக்கு சமீபம் உள்ள வரகூர், கண்டமங்கலம் முதலிய கிராமங்களும், அன்னரால் நிர்மாணிக்கப்பட்டு தானம் செய்யப்பட்டதே. இப்படி பல பல அரிய தர்மங்கள் அவர்களால் செய்யப்பட்டுள்ளன. அவைகள் பூராவையும் இச் சிறு வெளியீட்டில் விவரிப்பது இயலாது.

இவைகளுக்கெல்லாம் சிகரமாக கும்பகோணத்தில்; தான அனுஷ்டித்த மஹா யாகசாலையில் ரிக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம் சாஸ்திரங்கள் ஆகமம், ஸங்கீதம் யாவும் படிப்பிக்க வேதபாடசாலை நிறுவி அதன் நிர்வாகத்திற்காக சுவாமிமலை சமீபம் உள்ள "நாககுடி" கொள்ளிடக்கரை சமீபம் திருநல்லூர், திருக்கோடிக்காவல் முதலிய கிராமங்களில் பூமியையும் அளித்துள்ளார்கள்.


தான் யாகம் செய்த இடத்தில் வேதசாஸ்திரங்களை பயில பாடசாலையை ஏற்படுத்தியதுடன் ஸ்ரீ வீர ஆஞ்சநேயரையும், அச்வத்த (அரசு) வன்ஹி விருக்ஷத்தையும், ப்ரதிஷ்டை செய்துள்ளதை ஆஸ்திகர்கள் இன்னும் பக்திசிரத்தையுடன் பூஜித்து வருகிறார்கள்.

இந்த வேதபாடசாலை 1542ல் நிறுவப்பட்டதாய் சரித்திரம் கூறும் அன்று முதல் இன்று


வரை மேற்படி பாடசாலை தொடர்ந்து நடந்து வருகிறது. ஒருகாலத்தில் இந்த பாடசாலை தெனனிந்தியாவில் ஓர் உயர்தர ஸர்வகலாசாலையாக திகழ்ந்துவந்தது. இந்த பாடசாலையில் வேதங்களிலும், சாஸ்திரங்களிலும் மற்ற கலைகளிலும் தன்னிகர் இல்லாத மஹான்கள் ஆசிரியர்களாய் பணியாற்றி பல பெரும் வித்வான்களை உலகுக்கு அளித்துள்ளனர். ஸங்கீத மும்மணிகளில் ஒருவரான மஹான் "முத்துஸ்வாமி தீக்ஷிதர்" அவர்களும் இந்த பாடசாலையின் மாணுக்கராவார்.

இப்படி பேரும் புகழும் பெற்று விளங்கிய பாடசாலையின் கட்டிடத்தை 1932ம் ஆண்டு கும்பகோணத்தில் பிரபல தர்மிஷ்டராயிருந்த ஸ்ரீ S. R. சுந்தரமய்யர் அவர்களால் தனது சொந்த சொத்திலிருந்து ஏராள பொருள் செலவில் மிக நேர்த்தியாய் புதுப்பிக்கப்பட்டு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் "ஸ்ரீ சங்கராச்சார்யஸ்வாமிகளால் மேற்படி புதிய கட்டிடம் சிறப்பாய் திறந்து வைக்கப்பட்டது.

ஸ்ரீ ஆச்சார்யாளின் பரமானுக்ரஹத்தால் இன்று இந்த பாடசாலையில் ஒன்பது வயதிற்குட்பட்ட குழந்தைகள் 36 பேர் அத்யயனம் செய்துவருகிறுர்கள். தற்போது ராஜகீய நிலச்சீர்திருத்த சட்டங்களால் பாடசாலையின் வருவாய் குறைந்து பாடசாலை நடத்துவதே மிகவும் சிரமமான நிலைக்கு வந்துவிட்டது. மேற்படி கட்டிடத்தில் வரையப்பட்டுள்ள வேத ஸ்வரூபத்தை விளக்கும் அபூர்வ சித்ரங்களும் வர்ணமிழந்து கட்டிடமும், பராமரிக்க முடியாமலும், பாடசாலை நிர்வாகமும், நடத்த முடியாமலும், ஓர் துர்கதி ஏற்பட்டு வருகிறது.



வேதாத்யயனம் செய்துவரும் மாணாக்கர்கள் (ரிக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம்)



பாடசாலை முன்புற தோற்றம்

# "பாடசாலை காரியாக்ரமங்கள்"

4—00 to 5—30 a. m. வேத ஆவர்த்தி
5—30 to 6—30 a. m. ஸ்நானம், ஸந்தியா வந்தனம், ஸமிதாதானம்
6—30 to 7—30 a m. ப்ரம்ம யஞ்யம்
7—00 to 8—00 a. m. காலை உணவு
8—00 to 11—00 a. m. வேதஸந்தை
11—00 to 12—30 p m. மாத்யான்னிகம், பகல் போஜனம் ஓய்வு
12—30 to 2—30 p. m. லௌகீக அத்யயனம் (ஆங்கிலம், தமிழ், கணக்கு)
2—45 to 4—45 p. m. வேத காவ்ய பாடம்
4—45 to 5—00 p. m. (லக்வசனம்) சிற்றுண்டி
5—00 to 6—30 p. m. விளையாட்டு, ஸந்தியாவந்தனம், ஸமிதாதானம், விஷ்ணு ஸகஸ்ரநாமம்
6—30 to 7—30 p. m. காவ்ய பாடம்
7—30 to 8—00 p. m. இரவு உணவு
8—00 to 9—00 p. m. லௌகீக பாட சிந்தனை

---

| | | |
|---|---|---|
| N. B:— | தற்போது ஸ்மார்த்த குழந்தைகள் | 22 |
| | வைஷ்ணவ குழந்தைகள் | 7 |
| | மாத்வ குழந்தைகள் | 6 |
| | ஆந்திரம் | 1 |

மேலும் விபரம் ஏதாவது தெரிந்துகொள்ள விரும்பினால் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு எழுதக் கோருகிறோம்.

**சேர்மன்,**

ராஜா வேதபாடசாலை கமிட்டி, கும்பகோணம்.

தொகை அனுப்பி உபகரிக்க வேண்டிய விலாஸம் :—

**PRESIDENT & TREASURER,**
ராஜா வேதபாடசாலை,
கும்பகோணம்.

॥ वेदो नित्यमधीयताम् ॥

माहं ब्रह्म निराकुर्याम् ।

मा मा ब्रह्म निराकरोत् ॥

यस्तित्याज सखिविदं सखायम् ।

न तस्य वाच्यपि भागो अस्ति ॥

* * * * * * * *

तस्मात् स्वाध्यायो अध्येतव्यः ॥

ஸ்ரீ வெங்கடேஸ்வர் பிரிண்டிங் ஒர்க்ஸ் கும்பகோணம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆவினம்

வீழ்க தண்புனல், வேந்தனும் ஓங்குக

ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே

சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.

— ஸ்ரீ திருஞான சம்பந்த சுவாமிகள்

**BOOK - POST.**

To

Is not delivered returned to

ராஜா வேத பாடசாலை,

(ஸ்தாபிதம் 1542)

யாகசாலை தெரு,

கும்பகோணம்.